நல்லூர் இளை நூலகம்
யாழ்ப்பாணம்

Registeardas a NewsPaper பக்கங்கள் 06 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 29 (12-03-1992) வியாழக்கிழமை ஓசை: 23

## இம்மாத முடிவிற்குள் க.பொ.த.(சா/த)பரீ.முடிவு

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த. (சா/த) பரீட்சையின் பெறுபேறுகள் இந்த மாத முடிவிற்குள் வெளியிடப்படும் என்று பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெகமுல்ல கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில் இலங்கை முழுவதிலும் ஐந்து லட்சத்து ஐம்பதினாயிரம் மாணவர்கள் தோற்றிய இப்பரீட்சையின் விடைத்தாள்கள் திருத்தும் வேலைகள் முடிவடைந்து விட்டதாகவும், அலுவலகப்பணிகள் இடம் பெறவேண்டியிருப்பதால் முடிவு (5ஆம் பக்கம் பார்க்க

# கொழும்பில் பாரிய குண்டுவெடிப்பு

# தகவல்களுககு அரசு இருட்டடிப்பு

## இரத்மலானை விமானத் தளத்தில் குண்டு வெடித்ததாக ஆருடம்

(கொழும்பு)

கொழும்பின் தெற்குப் பகுதியில் நேற்றுக் காலை 7. 30 மணியளவில் வெடித்த பாரிய இரு குண்டுகள் கொழும்பு நகரத்தையே அதிர வைத்தது. இந்த சத்தத்தினால கொழும்பு பீதியடைந்து பின்னர் தெளிவுற்றது. இக் குண்டு வெடிப்பால் காயப்பட்ட பலர் கொழும்பு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதேவேளை இக்குண்டு வெடிப்பு எங்கு நடந்தது காரணம் என்ன என தகவல் தெரிவிக்க இராணுவ, பொலிஸ் வட்டாரங்கள் மறுத்துள்ளதோடு, இது தொடர்பான தகவல்களை இருட்டடிப்பும் செய்து வருகின்றன.

இதேவேளை கொழும்பு இரத்மலானை விமானத்தளத்திலேயே குண்டு வெடித்ததாக கொழும்பில் மக்கள் பரவலாகப் பேசிக்கொண்டதாக ஏஜென்சிசெய்திகள் தெரிவிக்கின்றன.

இரத்மலானை விமானத் தளத்தில் நிறுத்தப்பட்டிருந்த சீனாவிடமிருந்து வாங்கப்பட்ட போர் விமானமொன்று வெடித்து இந்தச் சத்தம் எழுந்திருக்கலாம் என்றும், அல்லது போர் விமானத்தில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்து சத்தம் எழுந்திருக்கலாம் என்றும் கொழும்பில் ஆருடங்கள் நிகழுவதை ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை சிறிலங்கா இராணுவ பொலிஸ் வட்டாரங்கள் இக் குண்டுவெடிப்பு சம்பந்தமான செய்தியை இருட்டடிப்புச் செய்வதாகத் தெரிகின்றது.

இரதமலானைப் பகுதியில் குண்டு வெடித்ததாகவும் ஆனால் அதற்கு என்ன காரணம் எனக் கூறமுடியாது எனவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. இதேவேளை பொலிஸ் வட்டாரங்கள் தகவல் தருகையில் குண்டு வெடிப்பு நடைபெற்ற இடத்தை குண்டு வெடித்து இரண்டு மணித்தியாலங்களின் பின்பும் பொலிஸ் சென்ற

( 6ஆம் பக்கம் பார்க்க)

## அதிரடிபடை தலைமையகம் கொழும்பில் இடமாற்றம்

விசேட அதிரடிப்படையினர் தமது தலைமையகத்தை முன்னால் குற்றவியல் நீதி ஆணைக்குழு அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யவுள்ளனர். இது விசேட அதிரடிப்படையின் நடவடிக்கைகளை விரிவுபடுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

தற்போது கின்ஸிறோட்டில் இருக்கும் தலைமையகத்தையே விசேட அதிரடிப்படை இடம் மாற்றவுள்ளது.

கொழும்பு பல்கலைக் கழகத்தின் சட்டத்துறை விரிவுரை மண்டபத்துக்கும், புல்லர்ஸ் வீதியிலுள்ள இராணுவ அணிக்கும் இடையில்தான் இப் புதிய தலைமையகம் அமையவுள்ளது. விசேட அதிரடிப்படையினரின் தலைமையகம் கொழும்பு பல்கலைக் கழகத்திலிருந்து ஒரு சுவரால் மட்டுமே பிரிக்கப்பட்டுள்ளது.

இந்த இடம் விசேட அதிரடிப்படையினருக்காக அரசாங்கம் ஒரு வருடத்திற்கு முன்பே ஒதுக்கியிருந்த போதிலும், பல்கலைக்கழக மாணவர்களின் எதிர்ப்பையடுத்து இத்திட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

## பிரபாகரனே எங்கள் தலைவர் புலிகளை நாம் ஆதரிப்போம்

### மதுரைக் கூட்டத்தில் சுப வீரபாண்டியன்

(சென்னை)

விடுதலைப் புலிகளுக்கான எமது ஆதரவு என்றைக்கும் இருக்தும. விடுதலைப் புலிகளின் தலைவர் எங்களின் தலைவர் அன்றும், இன்றும் எப்பொழுதும் அவர் எமது தலைவர் விடுதலைக் குயில்களின் தலைவர் பேராசிரியர் சுப வீரபாண்டியன் மதுரையில் நடைபெற்ற கூட்டமொன்றில் எடுத்துரைத்தார்.

இக் கூட்டத்தில் பேசிய சுப வீரபாண்டியன், தமிழ்

(6ஆம் பக்கம் பார்க்க]

## தட்டுவான் கொட்டியில் மின்வேக அதிரடி

# ஏழு காவலரண்கள் புலிகளால் அழிப்பு; 10 இராணுவம் பலி; பலர் படுகாயம்

(கிளிநொச்சி)

ஆனையிறவு-தட்டுவான் கொட்டி சிறிலங்கா இராணுவத்தினரின் ஏழு காவலரண்களை விடுதலைப்புலிகள் தாக்கி அழித்தனர். நேற்று அதிகாலை 3-10 மணியளவில் இடம்பெற்ற இத் துணிகர மின்னல்வேக அதிரடியில் பத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயம் அடைந்தனர். பெருமளவு நவீன ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றினர்.

புலிகள்தரப்பில்போராளிகள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தட்டுவான் கொட்டியில் அள்ளப்பட்ட ஆயுதங்கள்

(கிளிநொச்சி)

ஆனையிறவு தட்டுவான் கொட்டிப் பகுதியில்சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைபுலிகளுக்குமிடையில் நேற்று அதிகாலை நடைபெற்ற பத்துநிமிட அதிரடித் தாக்குதலின்போது விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட நவீன ஆயுதங்களினதும், இராணுவத்தளபாடங்களினதும் விபரங்கள் வருமாறு:-

★ ஆர். பி. ஜி -01
★ ஆர். பி. ஜி ஷெல் - 05
★ ஆர் பி ஜி. பிறப்பர்-1
★ ஏ.கே. எல்.எம்.ஜி 01
★ ரி. 56 - 1 - 02
★ ரி. 56 - 2 - 03
★ ரி. 56 புதிய ரகம் - 01
★ ஜி. 3 ஏ 3 - 01
★ ஏ கே. ரவைக் கூடு - 20
★ ஏ. கே. ரம்ரவைச்கூடு -1
★ ஏ.கே.எல்.எம் ஜிலிங்-575
★ ஏ. கே கோல்சர் - 02
★ ஜி 3 ஏ 3 மகசீன் -04
★ நேற்றோ ரவைகள்- 281
★ ஐ.எம். ரவைகள் - 2750
★ ஜே. ஆர்.கைக்குண்டு - 09
★ ரி. 56 மகசீன் - 20
★ ஜி 3 மகசீன் - 02
★ கோல்சர் - 01
★ ஹெல்மட் - 02
★ தண்ணீர் கான் -01
★ தொலைத் தொடர்பு சாதனம் - 01
★ சப்பாத்து - 3 சோடி

## வீரச்சாவு

### கப்டன் சிறிசங்கர், லெப். டேவிட்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு தட்டுவான் கொட்டிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் ஏற்பட்ட கடுமமோதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் கப்டன் சிறிசங்கர், லெப். டேவிட் ஆகியோர் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த இவ்விரு வேங்கைகளுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## கண்ணிவெடியில் சிக்கிய 12 படையினர் படுகாயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வவுணதீவுப் பகுதியில் விடுதலைப் புலிகளின் சிளைமோர் கண்ணிவெடியில் சிக்கிய படையினரின் வாகனமொன்று பலத்த சேதமடைந்தது. இத் தாக்குதலில் பன்னிரண்டு படையினர் காயமடைந்ததோடு. படையினரோடு பயணம் செய்த ஒருவர் கொல்லப்பட்டுள்ளார் என்ற கூட்டுப்படைத் தலைமையகம் நேற்று அறிவித்துள்ளது.

## தட்டுவான் கொட்டியில் அகோரக் குண்டு வீச்சு

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு கட்டுவான் கொட்டிப் பகுதியில் நேற்று அதிகாலை சிறிலங்கா இராணுவத்தினரின் காவலரண் மீது விடுதலைப் புலிகள் மேற் கொண்ட தாக்குதலை தொடர்ந்து அப்பகுதியில் அகோர விமானக் குண்டு வீச்சுத்தாக்குதல்கள் இடம் பெற்றன.

விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களில் சிறிலங்கா

[6 ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

இம்மானுவேல் அமலதாஸ் என்பவரின் அடையாள அட்டை (இல 673385442 v) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வண்ணார்பண்ணை லோட்டஸ் வீதியிலுள்ள பாரதி சன சமூக நிலையத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (2276)

### குழந்தைகள் வைத்தியம்

தீவக பாக்கியம் குழந்தைகள் சிகிச்சை நிலையம் K. K. S. வீதி மனோகரா சந்திக்கு அருகாமையிலும் கல்வியங்காட்டிலிருந்து 1 மைல் தொலைவிலுள்ள இருபாலைச் சந்தியிலும் இயங்குகின்றது. (2284)

# விசேட பரீட்சையை உடன் நடத்துக

## பல்கலை மாணவர் பிரேமதாசாவிற்கு மகஜர்

வட இலங்கையில் க. பொ. த. உயர்தர பரீட்சை ஆரம்பத்தில் அறிவிக்கப்பட்ட திகதிகளில் நடத்தப்படவில்லை. அதற்கு மாணவர்களோ அல்லது பரீட்சார்த்திகளோ தம் குற்றம் எதனாலும் காரணமாயிருக்கவில்லை முழுமுயற்சியுடன் அப் பரீட்சைக்கு ஆயத்தம்பண்ணியபின் அவர்களின் எதிர்பார்ப்புகள் தவிடு பொடியாக்கப்பட்டமையால் பெரும் ஏமாற்றத்திற்குள்ளாயினர்.

இவ்வாறு, க. பொ. த. உயர்தரப் பரீட்சையை உடன் நடாத்தக் கோரி சிறிலங்கா ஜனாதிபதிக்கு யாழ். அரச அதிபர் ஊடாக யாழ். பல்கலைக்கழக மாணவர் அனுப்பி வைத்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அவ்வறிக்கையில் 1992 ஏப்பிரல் முற்பகுதியில் அதற்குப் பதிலான விசேட பரீட்சை ஒன்று நடத்தப்படும் என இடைக்கிடையே வெளிவந்த உறுதிப்படுத்தப்படாத தகவல்களினால் அவர்களின் உள்ளங்கள் புத்துயிர் பெற்றிருந்தன. ஆனால் அதுபற்றியஉத்தியோகபூர்வமான அறிவிப்புஎதுவும் இற்றை வரையும் வெளியிடப்பட வில்லை. இத்தகவலினால் நாமும் அதிருப்தி அடைந்ததோடுபரீட்சார்த்திகளும்மீண்டும் நிச்சயமற்றதும் ஏக்கமும் நிறைந்த ஒருநிலைக்குள்ளாகி மனமுறுகல் தன்மைக்கும் இட்டுச் செல்லப்பட்டனர்.

பரீட்சைக்கு அத்தியாவசியமான உடன் ஆயத்தங்களை அவர்கள் செய்ய ஏதுவாக ஒரு சிலவார முன்னறிவித்தல் ஆகுதல்தேவை என்பதை தாங்களும்நிச்சயம்ஏற்றுக்கொள்வீர்கள். மறுதரம் எக்காரணத்தினாலாகுதல் அவர்களால்எதிர்பார்க்கப்பட்ட இப் பரீட்சை மேலும் பின்போட்ப்படுமானால் 1992 இற்கான தேசிய தேர்வுப் பட்டியலில் அவர்களுக்கு உள்ள உண்மையான இடங்கள் பறிபோவதோடு குறித்தவயதில் பல்கலைக்கழக அனுமதியைப் பெற அவர்களுக்குரித்தான அரியதொரு வாய்ப்பையும் அவர்கள் இழக்கவும் நேரிடும்.

அதன் பயனாக அவர்கள் இன்னும் ஆழமான விரக்தி நிலைக்குள்ளாகி சட்டரீதியான அரசுக்கும், ஏன் இலங்கையில் சனநாயக அமைப்பு முறைக்குமே எதிரான வெறுப்பு நிலைக்கும் தள்ளப்படுவர்.

எனவே, யாழ்பகுதி மாணவ சமுதாயம் மேலும் கல்வியில் ஈடுபாடும் ஆழ்ந்த அக்கறையும் உடையவர்கள் ஆகியோரின் பிரதிநிதிகளாகிய நாம் தங்களிடம் வேண்டுவதாவது:

இங்கு நடாத்தப்படும் என எதிர்பார்க்கப்பட்டஇவ்விசேச பரீட்சையை அதே திகதிகளில் நடாத்துவதற்கு வேண்டிய சகல ஆயத்தங்களையும் பூர்த்தியாக்குமாறு பரீட்சைத் திணைக்களத்தைப் பணிக்கவும்

இப்பரீட்சைத் திகதிகள் பற்றிய உத்தியோகபூர்வமான ஒரு பகிரங்க அறிவித்தலை மிக விரைவில் வெளிப்படுத்தவும்,

இப்பரீட்சையை அமைதியாக நடாத்தி முடிப்பதற்கு எவ்விதத்திலும் பாதிப்பை விளைவிக்கக்கூடிய எந்த ஒரு நடவடிக்கையிலும் ஈடுபடாதிருக்கும்படி பாதுகாப்புப் படையினருக்கு அறிவுறுத்தவும்.

இம் மகஜரின் பிரதி ஒன்று சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அலுவலகத்திலும் சமர்ப்பிக்கப் பட்டிருக்கிறது.

## விசேட கூட்டம்

இன்று பிற்பகள் 2.00 மணிக்கு யாழ்மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறவிருக்கும் யாழ்மாவட்ட ப.நோ.கூ.சங்க தலைவர்கள், பொதுமுகாமையாளர்களுக்கான கூட்டத்தில் சில முக்கிய விடயங்கள் கலந்தாலோசிக்க வேண்டியிருப்பதால் அனைவரையும் தவறாது சமுகம் தரும்படி யாழ்மாவட்ட கூட்டுறவுப் பிரிவினர் கேட்டுள்ளார்கள்.

## மழை பெய்ய பிரார்த்திக்க கோரிக்கை

(கொழும்பு)

றம்ழான் மாதத்தில் மழை பெய்ய வணங்கும்படி அகில இலங்கை முஸ்லிம் லீக் அரசியல் பிரிவுத் தலைவர் ஏ. எல். எம். காசிம் நாட்டிலுள்ள அனைத்துப் பள்ளிவாசல்களையும் கேட்டுள்ளார். இதற்கென விசேட ஆராதனைகளையும் நடத்தும்படி பள்ளிவாசல்களைக் கோரியுள்ளார்.

மழைக்காக மாத்திரமல்லாமல் சமாதானத்துக்கும் முன்னேற்றத்துக்கும் நாட்டின் செல்வச் செழிப்புக்காகவும் சேர்த்து வணக்கம் செய்யும்படி கேட்டுள்ளார்.

## பணிமனை இடம்மாற்றம்

(யாழ்ப்பாணம்)

பரந்தன்-உதவி விவசாயப் பணிப்பாளர்(விதைகள்)பணிமனை தற்காலிகமாக சிலகாலம் வட்டக்கச்சி அரச பண்ணையில் இயங்கிவந்தது.

ஆனால் மீண்டும் இப்பணிமனை கடந்த 4.3.92தொடக்கம் முன்பு இயங்கியஇடத்தில் (பரந்தன் பண்ணைக்கு அருகாமையில்)செயல்படத் தொடங்கியுள்ளதாக பரந்தன் உதவி விவசாயப் பணிப்பாளர் இ.கந்தையா அறிவித்துள்ளார்.

## விபத்தில் அதிரடிப்படை மேஜர் பலி

(கொழும்பு)

நீர்கொழும்பு - கொழும்பு வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் விசேட அதிரடிப்படையைச்சேர்ந்தமேஜர் ஒருவரும் அவரது மனைவியும் மரணமானார்கள் என்று பொலிசார்தெரிவித்துள்ளனர்.

சிரான் ஜினசேன (32வயது) அவரது மனைவி பிரிசியா வதுருகல ஆகிய இருவருமே இவ்வாறு மரணமானவர்கள் ஆகும். இவர்கள் ஒரு மாதத்திற்கு முன்னரே திருமணம் செய்தவர்கள் ஆவர்.

## பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

தட்டாதெருச் சந்தியில் மூக்குக் கண்ணாடியொன்று மா. சண்முகராசா என்பவரால் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாயைச் சேர்ந்த தங்கராசா சரோஜினி தேவி (557651845 v) என்பவரது அடையாள அட்டை கைதடியில் அனுஜா என்பவரால் கண்டெடுக்கபபட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.


சுவை - தரம் - நியாயவிலை - உபசரிப்பு

வருகை தாருங்கள்!

## தமிழமுதம்

குளிர்பானவகமும் உணவகமும்

பிரதானவீதி, சுண்டிக்குளி,

யாழ்ப்பாணம்

தேச வளர்ச்சியின் அத்திவாரத்திற்கு
ஆக்கம்கொடுக்கும் ஊக்கசேவையிது.
ஆம்!
எமது தொழில், எமது வளம், எம்மவர் பணி
எல்லோருக்கும் ஏற்றம் கொடுக்கும்.
சமதர்மவழிக்கு ஆரம்பக்கல்லாய் அரும்பணியாற்றும்
தமிழமுதத்தை நோக்கி:
உங்கள் தாகத்தையும் பசியையும் தீர்த்துக்கொள்ள
வாருங்கள் என அன்புடன் அழைக்கின்றோம்.

தாகத்தைத் தீர்த்திட:

★ ஐஸ்கிறீம்

★ சர்பத்

★ பழரசம்

குளிரூட்டப்பட்ட பானவகைகளும்



தமிழமுதம்

பசியைப்போக்கிட காலை, மதிய உணவுவகைகளும் வெள்ளிக்கிழமை தோறும் பாயாசத்துடன் கூடிய உணவு வகைகளையும் சுவை ததும்பிட உடன் பெற்றுக் கொள்வதுடன் சகல விதமான புரியாணி வகைகளையும் பஸ்கற், மிக்சர், பூந்திலட்டு, றவ்வைலட்டு, வடை, றோள்கேக் போன்ற மற்றும் இன்னோரன்ன பலகார வகைகளையும் உடனுக்குடனும் முற்பதிவு மூலமும் பெற்றுக்கொள்ளலாம்.

முக்கிய குறிப்பு: வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

(சி/4031)


யா / ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
பழைய மாணவர் சங்கம்,
சுன்னாகம்.

## அறிவித்தல்

மேற்படி சங்கத்தால் 14.03.92 இல் நடாத்தப்பட இருந்த சாந்தன் இசைக்குழுவினரின் ''புரட்சிக் கானங்கள்'' எனும் நிகழ்ச்சி சுன்னாக ஐயனார் கோயில் உற்சவத்தை முன்னிட்டு 22.03.92 ஞாயிறு மாலை 5.00 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என்பதனை அறியத்தருகிறோம்.

- செயலாளர்

(2287)

## நினைவு கூருகின்றோம்

## 1992-03-12

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில், கல்முனையில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினர் கைது செய்த போது ஒரே சயனைட்டை பகிர்ந்து உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**லெப். உமாராம்** [முத்துக்குமார் சந்திரகுமார் - கல்லடி, மட்டக்களப்பு]

**சுந்தர்** [நல்லதம்பி சுந்தரலிங்கம் - காரைதீவு]

மட்டக்களப்பு, துறைநீலாவணைப் பகுதியைச் சுற்றிவளைத்த சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 4 தமிழர்கள்.

வல்வெட்டித்துறையில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானக்குண்டு வீச்சில் கொல்லப்பட்ட மூன்று தமிழர்கள்.

பருத்தித்துறையிலிருந்துயாழ்நகரைநோக்கிநடைபெற்ற பொது மக்கள் ஊர்வலத்தின் மீது முத்திரைச்சந்தைப் பகுதியில் வைத்து தேசவிரோதிகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட பெண் உட்பட 2 தமிழர்கள்.

1987 ஆம் ஆண்டு எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் எம்மைப் பிரிந்த -

**றோம்** [மன்னார்.]

1988 ஆம் ஆண்டு மண்முனைத்துறையில் இந்தியப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய -

**கடாபி** [க. பாலிப்போடி - முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு.]

1989 ஆம் ஆண்டு மட்டக்களப்பு, பெரியபுல்லுமலைப் பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். மாதவன்** [வடிவேல் தவராசா - மட்டக்களப்பு.]

1991 ஆம் ஆண்டு சிறிலங்கா கடற்படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

**கப்டன் தினேஷ்** [இராசதுரை ரவீந்திரமோகன் - கற்கோவளம்.]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(சி/4039)

# பாகிஸ்தானுக்கு சீனாவின் அணுஉலைஒன்று ஏற்றுமதி

## —சினுவா ஊர்ஜிதம்

(பீகிங்)

பாகிஸ்தானுக்கு மைக்ரோ அணு உலை ஒன்றினை சீனா ஏற்றுமதி செய்துள்ளது என்பதை சீனாவின் அதிகாரபூர்வமான செய்தித்தாபனமாகிய சினுவா இப்போது ஊர்ஜிதம் செய்துள்ளது.

மேலும் இதே மாதிரியான அணு உலைகளை ஈரானுக்கும், கானாவிற்கும் ஏற்றுமதி செய்வதற்கான உடன்படிக்கைகளில் சீனா கையொப்பமிட்டிருப்பதாக அச்செய்தி ஏஜென்சி மேலும் கூறியுள்ளது.

எனினும் ஈரானுக்கும், கானாவிற்கும் ஏற்றுமதி செய்யப்படவிருப்பதும், பாகிஸ்தானுக்கு கையளிக்கப்பட்டதுமான இந்த அணு உலை நியூற்ரோன் செயற்படுத்தலை பகுத்து ஆராயும் பணிக்கு என்றே பிரதானமாகப் பயன்படுத்தப்படக்கூடியது எனவும் தெரிய வருகின்றது.

அணு ஆயுத பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் சீனா கையெழுத்திட்டு ஒரு சில நாட்களில் இத்தகவல் வெளியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## பொரு. தடையை நீக்க ஈராக் வேண்டுகோள்

[ஜெனீவா]

ஈராக்கிறகான பொருளாதாரத் தடையை ஐக்கிய நாடுகள்சபை நீக்கவேண்டும் என்ற கோரிக்கையோடு ஈராக்கின் பிரதிப் பிரதமர் தாரிக் அசீஸ் ஜெனீவா சென்றுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபைத் தலைவரைச் சந்தித்துப்பேசியபின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தாரிக் அசீஸ் வளைகுடாயுத்த நிறுத்தம் தொடர்பாக ஐ.நா. நிறைவேற்றிய அனைத்து தீர்மானங்களுக்கும் ஈராக் கட்டுப்பட்டு நடந்து கொண்டு வருவதாக தெரிவித்தார்.

## கட்சி எம்.பிக்கள் மீது ஜனதா தள் ஆத்திரம்

(டில்லி)

லோக் சபாவில் அரசுக்கெதிராக வாக்களிக்க ஜனதா தள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் பலர் சபைக்கு வரவில்லை என்பதனால் ஜனதா தள் கட்சி ஆத்திரமடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த லோக் சபா உறுப்பினர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனதா கட்சித் தலைவர்களில் ஒருவரான ராம் விலாஸ் பஸ்வான் கூறியிருக்கிறார்.

கட்சி ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டால் ஏற்கனவே பிளவுபட்டிருக்கும்ஜனதா தளம் மேலும் பிளவு படக் கூடும் என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

மேலும் தெலுங்கு தேசம் கட்சியைச் சேர்ந்த 13 லோக் சபா உறுப்பினர்களில் ஒன்பது பேர் வாக்களிக்க லோக் சபா வராததால் தெலுங்கு தேசம் கட்சியுடனான கூட்டில் பிளவு படலாம் எனத் தெரிகிறது.

லோக்சபாவில் அரசுக்கெதிராக வாக்களிக்க எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 55 லோக் சபா உறுப்பினர்கள்வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## தீவிபத்தில் 400 குடிசைகள் தீக்கிரை

சென்னை ராயபுரம் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலையில் ஏற்பட்ட தீ விபத்து ஒன்றில் நானூறுக்கும் அதிகமான குடிசைகள் எரிந்து நாசமாகியுள்ளன.

## தேர்தல் பிரசாரங்களில் ஜோர்ஜ் புஷ் தீவிர ஆர்வம்

(வாஷிங்டன்)

அமெரிக்கஜனாதிபதித்தேர்தலில் ஈடுபடுவதற்கான பிரசார வேலைகளில் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தீவிரமான ஈடுபாடு காட்டத்தொடங்கியுள்ளார்.

எதிர் வரும் நவம்பர் 3 ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக்கட்சியின் நியமனத்தைப்பெறுவதில் ஜோர்ஜ் புஷ் தோல்வி அடையக் கூடும் என்றுஅபிப்பிராய வாக்கெடுப்புக்கள் தெரிவித்துள்ளன.

# அணுஆயுத பரவல் தடுப்பு இந்தியா கையெழுத்திடாது

[வாஷிங்டன்]

அணு ஆயுத பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில்இந்தியா கையெழுத்துப் போட மாட்டாது என்றும், ஐந்துதேச மாநாடு எதிலும் கலந்து கொள்வதில்லையென்றும் இந்தியா அமெரிக்காவிடம் தெரிவித்துள்ளது.

இந்திய வெளியுறவுச் செயலாளர் ஜே. என். டிக்ஷிற் அமெரிக்கா சென்றிருந்தபாதே இந்தியாவின் இந்த முடிவை அமெரிக்காவிடம் தெரிவித்தார்.

அணு ஆயுத பரவல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து இருதரப்புபேச்சுவார்த்தைநடத்த இந்தியா தயாராக இருப்பதாகவும் அவர்தெரிவித்துள்ளார்.

இந்தியாவும்அமெரிக்காவும் அணு ஆயுத பரவல் தடுப்பின் நோக்கங்களையும், நலன்களையும் எந்த வகையில் தேடிஎர்த்திடமுடியும் என்பதைக் கண்டறிவதே இந்த இருதரப்பு பேச்சு வார்த்தையின் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும் என்றும் டிக்ஷிற் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க துணை வெளியுறவு அமைச்சர் லோறன்ஸ் ஈகின் பேகர் மற்று உயர்அதிகாரிகளையும் டிக்ஷிற் சந்தித்துப் பேசியுள்ளார்.

## அணு தடுப்பு ஒப்பந்தத்தில் சீனா கையெழுத்திட்டது

(லண்டன்)

அணுஆயுதப் பரவல் தடுப்பு உடன்படிக்கையில் சீனாவும் கைச்சாத்திட்டுள்ளது.

கடந்த புதன் கிழமை லண்டனில் பிரிட்டன் பிரதமர் ஜோன் மேயரைச் சந்தித்த சீன வெளியுறவு அமைச்சர் சியான்சென் இந்த உடன்படிக்கையில் சீனா கைசெழுத்திட்டமைக்கான ஆவணங்களைக் கையளித்தார்.

அணு ஆயுதங்களைக் கொண்ட வல்லரசுநாடுகளில் இதுவரை சீனாமட்டுமே இத்தகைய உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடாமல் இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவுடனும், ரஷ்யாவுடனும் இணைந்து பிரிட்டன் அணு ஆயுதப்பரவல் தடுப்பு இயக்கத்தில் முன்னணிப்பங்கு வகிப்பது தெரிந்ததே.

சீனாவின் தேசிய மக்கள் அசெம்பிளி கடந்த டிசம்பரில் இந்த உடன்படிக்கையில் சீனா கையெழுத்திடுவதற்கு இணக்கம் தெரிவித்திருந்ததாக அறிவிக்கப்பட்டது.

## இனக்கலவரங்களை அடக்க இந்தியாவில் விசேட படை

(டில்லி)

இனக்கலவரங்களை அடக்குவதற்கு விசேட படை ஒன்றை இந்தியா அமைக்கவிருக்கிறது என்று இந்திய உள்துறை அமைச்சர் எஸ்.பி.சவான் குறிப்பிட்டுள்ளார்.

இனக்கலவரங்கள் நடைபெறும் பகுதிகளுககு துரித செயல் நடவடிக்கைப் படை யூலை மாதம் முதலாம்திகதியிலிருந்து செயல்படும் என்றும்,

மத்திய றிசர்வ் பொலிஸ் படையைத்திருத்தி அமைத்து துரித செயல் நடவடிக்கைப் படை அமைக்கப்படுமென்றும், மத்திய அரசாங்கத்தின் பரா இராணுவப்பிரிவான இப்படை விசேட திறமையான படையாக இருக்கும் என்றும், இனக்கலவரங்களை அடக்குவதற்கு இப்படைக்கு தகைமையுண்டு என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இப்படை மதப்பற்றற்றதாக இருக்குமென்றும், இந்த அடிப்படையிலேயே படையினருக்கு பயிற்சி அளிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## லெனினின்உடல்விற்பனை வதந்தி என அரசு மறுப்பு

சோவியத்தின் ஸ்தாபகர் லெனினின் பதப்படுத்திய உடலை விற்றுவிட முடிவு செய்திருப்பதாக பரவிய வதந்தியை அடுத்து இரண்டு கோடியேஎழுபது இலட்சம் டொலர்கள்வரை விலை கொடுக்க பலர் முன் வந்துள்ளனர்.

லெனினின் உடலை யாராவது ஒருகோடியே ஐம்பது இலட்சம் டொலர்கள் கொடுத்து வாங்க முன் வந்தால் விற்றுவிடலாம் என சோவியத் யூனியனில் வெளியான 'போபர்ஸ்பை' உட்பட பல செய்தி நிறுவனங்கள் கடந்த நவம்பரில் செய்தி வெளியிட்டிருந்தன.

இதன் பிறகுதான் ரஷ்ய அரசுக்கு தலைவலியே ஆரம்பமானது. லெனினின் உடலை வாங்கிக் கொள்ள பலரிடையே போட்டியெழுந்தது. போட்டியின் உச்சக்கட்டமே இரண்டு கோடியே எழுபது இலட்சம் டொலர்கள் ஆகும்.

இச்செய்தி பற்றி 'போபர்ஸ்பை' செய்தி ஆசிரியர் கூறுகையில் இப்பத்திரிகைச் செய்தி கற்பனையானதொன்றுதான் இதை எந்தளவுக்கு மக்கள் நம்புகிறார்கள் என்பதை அறிவதற்காகத்தான் இப்படியொரு செய்தியை வெளியிட்டதாக ஆசிரியர் கிறிஸ்டோபர் பக்லி தெரிவித்தார்.

எனினும் இது குறித்து ரஷ்ய பாதுகாப்பு அமைச்சக அதிகாரி ஆன்பரி சொனன்கோ கருத்துத்தெரிவிக்கையில்-

லெனினின் உடலை விற்கப்போவதாக வெளியான செய்தி அபத்தமானது எனவும், அதுபோல் எந்த எண்ணமும் அரசுக்கு இல்லை எனவும் ஆயிரம் முதல் இரண்டு கோடி எழுபது இலட்சம் டொலர்கள் வரை லெனினின் உடலுக்கு விலைபேசி விண்ணப்பங்கள் வந்துள்ளன. ஆனால் எந்த அரச அமைப்பும் லெனினின் உடலை விற்பது குறித்து விவாதிக்கவில்லையெனவும் அவர் தெரிவித்தார்.

## கால மாற்றத்திற்கேற்ப இணைய வேண்டும்


### --பி.வி.நரசிம்மராவ்

(டில்லி)

காலத்தின் மாற்றங்களுக்கேற்ப பொலிசாரும், பாதுகாப்புப் படையினரும் இணைந்து செயற்பட வேண்டியது அவசியம் என்று இந்தியப் பிரதமர் பி.வி நரசிம்மராவ் கேட்டுக் கொண்டார்.

நேற்று முன்தினம் புதுடில்லியில் பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல்கள் மற்றும் டைரக்டர் ஜெனரல்களின் மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில் தேசிய மற்றும் சர்வ தேசிய நிலைமைகளையும்விபரித்தார்.

அத்துடன், உள்நாட்டுப் பூசல்களையும், சண்டைகளையும், சுயலாபத்திற்காகப் பயன்படுத்திக் கொள்ளும் வெளியாரின் முயற்சிகளையும் நாட்டின் ஒற்றுமையைக் குலைப்பதற்காக வெளியாரின் தூண்டுதலோடு விடுக்கப்படும் மிரட்டல்களையும் சட்ட



அமுலாக்கலுக்கான அதிகாரிகள் மிகுந்த விழிப்புடன் கண்காணிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

## கரையோரக் கண்காணிப்பிற்கு அரக்கோணத்தில் விமானப்படைத் தளம்

இந்தியக் கடற்கரையின் கிழக்குக் கரைப்பகுதியின் கண்காணிப்பிற்கென அரக்கோணத்தில் அமைக்கப்பட்டுள்ள ஐ.எம்.எஸ். ராஜாளி என்ற விமானத் தளமொன்றை இந்திய ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் நேற்றுத் திறந்து வைத்தார்.

தென்னாசியப் பிராந்தியத்தில் மிகப்பெரும் விமான ஓடு பாதையைக் கொண்ட இவ் விமானத்தளம் சென்னையில் இருந்து நூறு மைல் தொலைவில் உள்ள அரக்கோணத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

1988நவம்பர்12இல்அடிக்கல் நாட்டப்பட்ட இத்தளத்திற்கான வேலைகள் மூன்றரை ஆண்டுகளில் நூறு கோடி ரூபா செலவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இங்கு 8கியூ 142 ரக விமானங்கள் தங்க வைத்துப் பராமரிக்கப்படவுள்ளன.

இத்தகைய விமானங்கள் ஆறு நிமிட நேரத்தில் சென்னைக் கடற்கரைக்கு அரக்கோணத்திலிருந்து வந்துவிடக் கூடியவை என்றும், ஆறு-ஏழு மணி நேரம் பறக்கக் கூடியவை என்றும், ஆழ்கடலில்இருக்கும் நீர்மூழ்கிகள் உட்பட, கடலில் ஊடுருவலைக்கண்டறிந்து அவற்றை அழித்து விடக் கூடியவை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியப் பிரதமர் மொறீசியஸ் பயணம்

மொறிசியஸ் நாட்டுக்கு இரண்டுநாள் சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டு இந்தியப் பிரதமர் பி.வி நரசிம்மராவ்நேற்றுபுதுடில்லியிலிருந்து பயணமானார்.

இன்று மொறீசியஸ் நாட்டில் நடைபெறும் குடியரசு தினக்கொண்டாட்டங்களில் தலைமை விருந்தினராக கலந்து கொள்ளவிருக்கின்றார்.

மேலும் இருநாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு பரஸ்பர நலன்கள் பற்றிய விடயங்களையும் அவர் விவாதிக்க உள்ளார்.

பிரதமருடன் செல்லும் உயர்மட்டக்குழுவில், வெளியுறவு இணைஅமைச்சர் எட்வார்டோ, பெலய்ரோ உட்பட ராம்ஜெத்மலானி, முன்னாள் அமைச்சர் தினேஷ்சிங் ஆகியோரும் இடம்பெறுகின்றனர்.

நல்லூர் கிளை நூலகம்
யாழ்ப்பாணம்

# "மகாமக கொடுமைக்கு காரணம் மாநிலத்து கோலேந்தியின் பக்திப் பரவச நாடகம்"

"உண்மையிலேயே பக்தர்களாக இருப்பவர்களை விட பக்தி மான்களைப்போல் நடிப்பவர்கள் ஆபத்தானவர்கள். பக்தர்களாக இருப்போர் தம்மைத்தான் ஏமாற்றிக் கொள்கின்றார்கள். ஆனால் பக்தர்கள் போல் நடிப்போர் உலகத்தையே ஏமாற்றுகின்றார்கள். இந்த இரண்டாவது வகையைச் சேர்ந்தவர்கள்தான் இன்றைக்கு தமிழக ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்திருக்கிறார்கள்"

இவ்வாறு தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார். சென்னையில் இடம்பெற்ற கூட்டமொன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்து பேசிய அவர்,

சுட்ட செங்கல்லைத் தாம்பாளத்தில் வைத்து தூய வெள்ளைத் துணியால் மூடி கொஞ்சம் தண்ணீரையும் தெளித்தால் ஆவி எழும். அந்த ஆவி எழும் தாம்பாளத்தை ஆண்டவனின் சிலைக்கு நேராக தூக்கி காட்டி விட்டு சுடச் சுட சுவையான பொங்கல் செய்து படைத்தேன் என்று ஊர் மக்களை ஏமாற்றும் புரோகிதர்களைபற்றி கிராமப்புறத்தில் சின்ன வயதிலேயே நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அந்த புரோகிதர்களைவிட புத்திசாலித்தனமாக ஆண்டவனை நம்பும் அடியார்களை ஏமாற்றும் வித்தை கற்றவர்கள்தான் இன்று இந்த தமிழ்ப்புவியை ஆள வந்துள்ளார்கள்.

குடந்தையில் மகாமகம் நடக்கின்றதென்றால் பக்தர்கள் செல்லட்டும். பெருங் கூட்டத்தைப் பாதுகாக்க காவல் துறையினர் அதிகமாகவே செல்லட்டும்

ஆனால் இருபது வெள்ளி குடமெடுத்து அவற்றில் எங்கிருந்தோ கொண்டுவந்த தண்ணீர் நிரப்பிகுளிப்பதற்கென்று தனியாக ஒரு பொற்பந்தல் எழுப்பி அதிலோர் திறந்த வெளிப்பீடத்தில் குந்திக் கொண்டு 'நீ பாதி நான் பாதி' என தோழியர் இருவரும் (ஜெயலலிதாவும் சசிகலாவும்) ஆளுக்குபத்துக்குடம் பன்னீர் கலந்த நீரை மாறி மாறி அபிஷேகித்துக் கொள்ளவும். அதனைக் காவல் காத்திட பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பொலிசார் வேலி அமைத்து நின்றிடவும் ஒரு சர்க்காரே அங்கே போய் 'டேரா'போட்டு கொண்டிருந்ததென்றால் இதற்கு பெயர் தான் பெரியார் வழி அண்ணா வழியா? திராவிட இயக்க பரிணாமவளர்ச்சியின் தோற்றமா?

அரசாங்கம் அங்கு போட்ட ஆட்டத்தால்தானே நூற்றுக்கு மேற்பட்டவர்களின் சுவாசக் குழாய்கள் கிழந்து போயின இருதயங்கள் நொருங்கிப் போயின ஒரு பெண்மணி அடித்த கூத்தால் முப்பதுக்கு மேற்பட்ட பெண்மணிகளின் கண்ணின் கருமணிகள் அல்லவா மூடிப்போயின மாமாங்க குளத்தில்மிதந்த மலர்களோடு சேர்ந்து பல மழலை மலர்களுமல்லவா மிதக்க நேர்ந்தது.

## இப்படியொரு பட்டி மன்றம் தமிழகத்தில் இடம்பெற்றது

"தமிழகத்தில் எம்.ஜி.ஆர். ஆட்சி மீண்டும் மலர அடிப்படைக்காரணம் முதலமைச்சர் ஜெயலலிதாவின் வீரமா? தியாகமா?" என்ற தலைப்பிலான பட்டி மன்றம் ஒன்றும் அண்மையில் தமிழகத்தில் நடைபெற்றது. சிலம்புச் செல்வன் ம.பொ.சி. தலைமையில் நடைபெற்ற இப்பட்டிமன்றத்தினை சென்னை வக்கீல்கள் சங்கம் ஒழுங்கு செய்திருந்தது ஜெயலலிதாவின் 44 ஆவது பிறந்தநாள் விழாவையொட்டியே இந்த நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டது

இந்த மகாமக கொடுமைகளுக்கு காரணம் இந்த மாநிலத்து கோலேந்தியின் பக்திப் பரவச நாடக காட்சியின் ஜிலு ஜிலுப்பும் பளபளப்பும் தான் என்பதை எழுதாத பத்திரிகை கிடையாது. இயம்பாத பக்தர்கள் கிடையாது.

காலியான குடங்களைக் கோயில்களுக்கு அனுப்புவதாலும் பெரிய விளம்பரம், போலியான பக்தியைக் காட்டி புரோகிதர்கள் கைகளிலே அவைகளை ஏற்றி புகைப்படம் எடுத்துக் கொண்ட புதுமையே புதுமை.

குடங்களுடன் குருக்கள்மார் இருமருங்கிலும் முன்னும்பின்னும் அணிவகுத்து நிற்கும்அற்புதத்தை அண்ணாவும், அய்யாவும் பார்த்திருந்தால் பதைத்திருப்பர். பகுத்தறிவு என்ன ஆயிற்று என்றுஏற்படும் பதைப்பு அல்ல. எமதுபெயரைபயன் படுத்திக் கொண்டு இப்படி ஒரு செப்படி வித்தையா? என்று பதைத்திருப்பர்.

பேசாமல் 'அண்ணா' பெயரையும் 'திராவிட' என்ற பெயரையும் கட்சியில் இருந்து எடுத்து விட்டு நண்பர் எம்.ஜி ஆர்- அவர்கள் 1986 இல் எந்த பேரவையை கலைக்கச் சொல்லிநீண்ட அறிக்கை விடுத்தாரோ அந்த "ஜெயலலிதா பேரவை" என்ற பெயரையே வைத்துக் கொண்டால் யார் கேட்கப் போகிறார்கள்? பேரவையே இன்று ஜெயலலிதா பேரவையாகத்தானே இருக்கிறது.

கோட்டைக்குள் நுழைந்ததுமே "கோவில்களை பாதுகாக்கப் போகிறேன். கொண்டு வந்து கொட்டுக நிதியை" எனக்கேட்டு கொத்தடிமைகளின் கம்பங்களாக குவிந்தது பெரு நிதி! கோவில்கள் தான் பாதிக்கப்பட்டனவா? அல்லது கோவில்களில் இருந்து கடவுள் தான் காப்பாற்றப்பட்டாரா? ஆனால் 1991 ஆம் ஆண்டில் மட்டும் ஆலயங்களைப் பாதுகாக்க நிதிதிரட்டுவதும் ஆலய வாரியம்அமைத்ததுமான காரியங்கள் அறிவிக்கப்பட்டுள்ள ஆண்டில் மட்டும் ஆலயங்களில் உள்ள ஆண்டவன் சிலைகள் தூள் தூளாக்கப்பட்டுள்ளன.

பக்தியைப் போற்றிட - பகவான் நாமம் ஜெபித்திட அவதாரம் எடுத்துள்ளதாக பறைசாற்றிக் கொண்டு மாநில பரிபாலனம்செய்ய வந்துள்ள இந்த மாதரசியின் ஆட்சியிலேயே தான் கோவில்களில் கடவுள் சிலைகள் நொருங்குகின்றன. மகாமக விழாவிற்கு குளிக்க வந்த பக்தர்கள் பலர் பிணமாயினர். இதனை உண்மையான பக்தர்கள் உணர்ந்தால் சரி

# வவு. சிங்களக் குடியேற்றம்; கண்காணிக்க படை அதிகாரி

[வவுனியா]

வவுனியா மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டில் கீழ்உள்ள பல பகுதிகளில் மீளக்குடியேற்றம் என்ற போர்வையில் சிங்களக் குடியேற்றம் செய்வதற்குஅரசு திட்டமிட்டிருப்பது அம்பலத்திற்கு வந்துள்ளது.

இராணுவ நடவடிக்கைகளுக்கு அஞ்சிஇடம்பெயர்ந்து சென்ற தமிழ்ப் பொது மக்களின் காணிகளில் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களை குடியேற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது

வவுனியா மாவட்டத்தில் உள்ள நான்குஉதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் மூன்றில் பகுதி பகுதியாக குடியேற்றம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது

இத் திட்டத்திற்கென புதிதாக இராணுவ அதிகாரி ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். அவர், அரசாங்கஅதிபர், உதவி அரசாங்க அதிபர்கள், கிராம சேவையாளர்களின் ஒத்துழைப்பை நாடியிருப்பதாக அறியப்படுகிறது.

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் பகுதியில், நெளுக்குளம், பூப் பங்குளம், பட்டாணிச்சிபுளி பங்குளம், குருமன்காடு, சுற்குழி, தவசிகுளம், தேக்கங்காடு, தோணிக்கல் ஆகியவற்றிலும் சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கொக்குவெளி மற்றும் வேறொரு கிராமத்திலும் செட்டிகுளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சின்னமாங்குளம் பகுதியிலும் சிங்களக் குடியேற்றம் என்று அறிவிக்கப்பட்டு சிங்களக் குடியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

தேக்கங்காடு, தோணிக்கல் பகுதிகளில் ஏற்கனவே பல சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குடியேறும் குடும்பங்களுக்கு பெருந்தொகையான பணம் உதவித் தொகையாக வழங்கப் படும்என்று அறிவிக்கப்பட்டுள்ளது [தி]

# மலையகத்தில் கடும் வரட்சி தேயிலை நிறம் மாறுகிறது

(கொழும்பு)

நாற்பது நாட்கள் மழை பெய்யாததனால் மலை நாட்டுப பகுதியிலுள்ள தேயிலைச் செடிகள் மஞ்சள் நிறமாக மாற ஆரம்பித்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இக் கடும் வரட்சி நிலை மேலும் தொடருமானால் வெகு துரிதமாக தேயிலைச் செடிகள் கருகிவிடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென் பகுதியில் நிலவும் கடும் வரட்சி காரணமாக களனி கங்கையில் நீர்மட்டம் குறைய ஆரம்பித்துள்ளது. இதனால் அம்புத்தல நீர்தேக்கத்திலிருந்து கொழும்பு நகருக்கும் அதனை அடுத்த பகுதிகளுக்கும் குடிநீர் வழங்க இயலாத நிலை ஏற்படலாம் என்று அஞ்சப்படுகிறது

கடல் நீர் களனி ஆற்று நீருடன் கலந்துள்ளதால் ஆற்றுநீர் உப்பாகி விட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## ஆரம்ப சுகாதார பயிற்சி வகுப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ் மாநகராட்சி மன்றப் பிரதேசத்தில் 'யுனிசெவ்' உதவியுடன் பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்காக 'ஆரம்ப சுகாதார பராமரிப்புப் பயிற்சி விரைவில் ஒழுங்கு செய்யப் படவுள்ளது.

இப் பயிற்சியில் கலந்து கொள்ள விரும்பும் பாலர் பாடசாலைஆசிரியர்கள் யாழ். மாநகராட்சிமன்ற 'யுனிசெவ்' பகுதியுடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி இ. தெய்வேந்திரன் கேட்டுள்ளார்.

## கச்சேரி அதிகாரமுள்ள மாவட்ட செயலகங்கள்

அரசாங்க அதிபர் அலுவலங்களுக்குச் சமமான அதிகாரமுள்ள மாவட்ட செயலகங்கள் நிறுவப்படவுள்ளன. வடக்கு - கிழக்கு நீங்கலாக 237 உள்ளூராட்சி மன்றப் பிரிவுகளில் இந்தச் செயலகங்கள் நிறுவப்படவுள்ளதாக மாகாணசபைகள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா தெரிவித்தார்.

பண்டாரவளை புனித யோசப் ஊவா மாகாண நிர்வாக அதிகாரிகள் மத்தியில் பேசிய அமைச்சர் இன்று சேவையிலுள்ள அரசாங்க அதிபர்களை அரசு மறக்காது சேவை மூப்பு அடிப்படையில் நிர்வாக சேவையில் அவர்களுக்குப் பொருத்தமான இடங்கள் வழங்கப்படும் என்றார்.

## கொக்குவில் இந்து-ஸ்கந்தவரோதயா கிரிக்கெட் போட்டிகள் 'டிரா'வில் முடிவடைந்தது

(யாழ். விளையாட்டு நிருபர்)

யாழ்ப்பாணப் பாடசாலைகளுக்கிடையிலான வருடாந்த கிரிக்கெட் போட்டி (கொக்குவில் இந்துக் கல்லூரியும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும்) சனிக்கிழமை 8 ம் திகதி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறறது. இப்போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது

ஸ்கந்தவரோதயாக்கல்லூரி தனது முதலாவது இன்னிங்சில் மொத்தம் 136 ஓட்டங்களைப் பெற்றது. இதில் செல்வன் ஜெயகோபன் 40 ஓட்டங்களையும் செல்வன் மதி 29 ஓட்டங்களையும் பெற்றனர்.

கொக்குவில் இந்துக் கல்லூரி சார்பில் செல்வன் தனிகேசவன் 4 விக்கட்டுகளைக் கைப்பற்றினார்.

கொக்குவில் இந்துக் கல்லூரி தனது முதலாவது இன்னிங்சில் மொத்தம் 144 ஓட்டங்களைப் பெற்றது. இதில் செல்வன் கிருபாகரன் 48 ஓட்டங்களையும், செல்வன் ஜீவன் 26 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி சார்பில் செல்வன் ஜெயகோபன் 4 விக்கெட்டுக்களையும். துஸ்யந்தன் 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

கொக்குவில் இந்துக் கல்லூரி கொடுக்கப்பட்ட 7 ஓவர்களில் நிதானமற்ற முறையில் விளையாடி இரண்டாவது இன்னிங்சில் 3 விக்கெட்டுகளை இழந்து 39 ஓட்டங்களைப் பெற்றனர். (42

## மேல்மாகாணம் புதிதாக வந்தோர் பதிய மீண்டும் அறிவுறுத்தல்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து மேற்கு மாகாணத்திற்கு புதிதாக வந்தவர்கள் பற்றிய விபரங்களை அவர்கள் தங்கியிருக்கும் வீட்டுச் சொந்தக்காரர்கள் அறிவிக்க வேண்டும் என கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு ஜூலை மாதம் தொடக்கம் அந்த நடைமுறை பின்பற்றப்படுகின்ற போதிலும் அதற்குப் பின்னரும் பலர் மேற்கு மாகாணம்வந்துள்ளதால் இவ்வாறு பதிவு செய்யுமாறு கேட்கப் படுவதாகதெரிவிக்கப்படுகிறது

வீட்டுச் சொந்தக்காரர் தமது வீட்டிற்கு புதிதாக எவரும் வந்தால் அவர் பற்றிய விபரங்களை அறிவிக்க வேண்டும் என கேட்கப்பட்டுள்ளனர்,

## ரவைகளை உரசியவர் படுகாயமடைந்தார்

(முள்ளியவளை)

இரண்டு துப்பாக்கி ரவைகளை ஒன்றுடன் ஒன்று குத்திப்பார்த்த நபர் ஒருவர் படுகாயமடைந்தார். முள்ளியவளையைச் சேர்ந்த கனகலிங்கம் (வயது 32) என்பவரே கிடைத்த இரண்டு துப்பாக்கி ரவைகளை எடுத்து அவற்றை ஒன்றுடன் ஒன்றைக் குத்தப் பார்த்த போது அது வெடித்ததில் படுகாயமடைந்தராவர்.

இவர் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச,க)

## சிந்தனைக்கு

ஒன்றைச் செய்வதற்கு வேண்டிய தேர்ச்சி
அதைச் செய்வதனால் தான் பெற முடியும்
— ரால்ப் - வால்டோ எமர்சன்


# ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 12-03-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05


# வெடிப்பொருள்கள் விளையாட்டுப் பொருளல்ல

''இளவாலையில் ஷெல் ஒன்றை குற்றிய போது அது வெடித்ததில் இளைஞர் கையை இழந்தார். மற்றவர் படுகாயம் அடைந்தார்.''

''இரண்டு தோட்டாக்களை ஒன்றுடன் ஒன்று குற்றிப்பார்த்ததில் ஏற்பட்டவிபத்தில் ஒருவர் காயமடைந்தார்.''

''மிதிவெடியைப் பரீட்சித்துப் பார்த்த பின் காலால் மிதித்துப் பார்த்த சிறுவன் தனது காலை இழந்தான்''

அண்மைக்காலத்தில் இவ்வாறாக வெடிப் பொருள்களுடன் விளையாடிய பலருக்கு விபரீதங்கள் பல ஏற்பட்டுள்ளன. இதனால் பலர் மரணமடைந்துள்ளனர். பலர் படுகாயமடைந்து நிரந்தர அங்கவீனர்கள் ஆக்கப்பட்டுள்ளனர்.

வெடிப்பொருள்களைக் கொண்டு நடமாடுவதே ஆபத்தானது. அவற்றை எவ்வாறு கொண்டு நடமாட வேண்டும் என அதனுடன் பழகுகின்றவர்களுக்கு பல அறிவுறுத்தல்கள் அவர்களின் பயிற்சிக் காலத்தில் வழங்கப்படுவதுண்டு. அவ்வாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டும் கூட சில சிறிய தவறுகளினால் பெரும் இழப்புக்கள் ஏற்படுகின்றன, அவ்வாறு எமது மண்ணிலேயே ஏற்பட்ட துக்ககரமான சம்பவங்களை மக்கள் அறிவார்கள். இந்நிலையில் வெடிப்பொருள்களுடன் விளையாடுவது ஆபத்தானது என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

சிறிலங்கா இராணுவத்தால் ஏவப்பட்ட வெடிக்காத எறிகணைகளையோ அன்றி வெடிக்காத விமானக்குண்டுகளையோ, அல்லது சிறிலங்கா இராணுவம் தரித்து விட்டு விலகிச் சென்ற பகுதிகளிலோ ஏதாவது வெடிப் பொருள்கள், அல்லது புதுவகையான பொருள்கள் ஏதும் காணப்பட்டால் அது குறித்து தமக்கு உடன் தகவல் தருமாறு விடுதலைப்புலிகள் பலதடவைகள் அறிவித்துள்ளார்கள். ஆனால், அதுபற்றி மக்கள் பெரியளவில் கவனம் செலுத்தியதாகவோ அன்றி அக்கறை காட்டியதாகவோ இல்லை.

வெடிப் பொருள்களை விளையாட்டுப் பொருள்களாக்கி வினையைத் தேடிக் கொள்ளும் கதையே நீள்கின்றது. இவ்வாறு வினையைத் தேடிக்கொள்பவர்கள் தனியாக விபரம் தெரியாத சிறுவர்களாக மட்டும் இருப்பினும் ஓரளவு ஏற்றுக் கொள்ளலாம். பொறுத்தும் கொள்ளலாம். ஆனால் இதில் பல்வேறு வயது மட்டத்திலும் உள்ளோர் ஈடுபடுவது பொறுத்துக் கொள்ளக்கூடியதோ அன்றி ஏற்றுக் கொள்ளக்கூடியதோ அல்ல.

சிறிலங்கா இராணுவத்தினரின் கண் மூடித்தனமான விமானக்குண்டு வீச்சு எறிகணை வீச்சு என்பனவற்றால் இறந்த ஆயிரக்கணக்கான மக்கள்போக படுகாயமடைந்தவர்களும் அங்கவீனர்களானவர்களும் ஆயிரக்கணக்கில் உள்ளனர். இந்நிலையில் மேலும் தமது விளையாட்டுப் புத்தியினால் படுகாயம் அடைவதும் அங்கவீனமாவதும் சமூகத்தில் மேலும் பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடியதாகும்.

அத்தோடு, சிறிலங்கா அரசாங்கம் விதித்துள்ள பொருளாதார, எரிபொருள் தடையுடன் மருந்துப் பொருள்களுக்குமான தடையின் காரணமாக வைத்திய வசதிகள் மிகவும் அரிதாகவே உள்ளன. இந்நிலையில், விபத்துக்களில் சிக்குபவர்களின் உயிர்களைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளை இயன்றளவில் மேற்கொள்ளக்கூடியதாக உள்ளதே ஒழிய நவீன சிகிச்சை முறைகளைப் பயன்படுத்தக் கூடியதாகவோ அவற்றின் மூலம் காயமடைந்தவர்களின் உடல் உறுப்புக்களை முழுமையாக நல்லநிலையில்பராமரிக்கக் கூடியதான வசதிகளோ இல்லை.

மேலும் தவிர்க்கமுடியாத காரணங்களால் பெருமளவில் இளைஞர்கள், யுவதிகள் காயமடைந்து வரும் வேளையில் விளையாட்டுக்களினால் ஏற்படும் விபத்துக்களினால் காயமடைந்து வருபவர்களினால் தவிர்க்க முடியாமல் காயமடைந்து வருபவர்களைப் பராமரிப்பதிலும் சில சிக்கல்கள், நெருக்கடிகள் ஏற்படுகின்றன.

இந் நிலையில் வெடிப்பொருள்களுடன் விளையாடுபவர்கள் தமக்கும் துன்பத்தைத் தேடிக்கொள்வதோடு சமூகத்திற்கும் சில சிரமங்களைத் தோற்றுவிக்கின்றனர். இதனைக் கருத்திற்கொண்டு மக்கள் வெடிப் பொருள்களுடன் விளையாடுவதை நிறுத்தவேண்டும். இதில் இளைஞர்கள், பெரியவர்கள் பொறுப்புடன் நடந்து கொள்ளவேண்டும். சிறுவர்கள் விடயத்தில் பெற்றோர் கவனமாக இருக்கவேண்டும். இதனால் தாமும் துன்பத்தில் சிக்காது சமூகத்திற்கும் நன்மை செய்தவர்களாக ஆவார்கள்.

# வங்கிகள் தனியார் மயம்; தமிழீழம் உருவாக உதவும்

– காமினி ஜெயசூரியா

''பெருந்தோட்டங்களை மட்டுமன்றி இரண்டு அரச வங்கிகளையும் தனியார் மயமாக்கும் திட்டம் தமிழ் தலைவர்களும், தமிழ்ப் பயங்கரவாதிகளும், தமிழ் ராஜ்யம் ஒன்றை உருவாக்குவதற்காக மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டதாகவே இருக்க முடியும்''

இவ்வாறு முன்னாள் அமைச்சரும் சிங்கள பாதுகாப்பு அமைப்பின் தலைவருமான காமினி ஜெயசூரியாகுறிப்பிட்டுள்ளார்கண்டியில்நடைபெற்ற சமயவைபவம் ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்,

''வடக்கு - கிழக்கு இணைப்பை எதிர்க்கவும் அதனைச் செய்யாதிருக்கவும் தேர்தல்களின் போர்து ஐ. தே. க. வாக்குறுதியளித்தது. ஜனாதிபதி பிரேமதாசாவும் இவ்வாறான வாக்குறுதியை வழங்கியே தேர்தலில் வெற்றி பெற்றார் இந்த நிலையில் தொண்டமானின் யோசனைகளை எதிர்ப்பதாக அரசாங்கம் ஏன் நேரடியாகச் சொல்ல முடியாதுள்ளது.'' எனவும்

தமது மாற்று யோசனைகளை வெளியிடுமாறு மற்றவர்களிடம் கோரும் அரசாங்கம் தன்னுடைய திட்டம் என்ன என்பதனை நாட்டுக்குத் தெரிவிக்க ஏன் முடியவில்லை எனவும் தெரிவித்தார்.

அத்துடன் இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் ஆயுதங்களை வாங்குவதற்காக பாதுகாப்புப் படையினர் நிதி கேட்கும் போது அவர்கள் அதனை மறுத்து ''நாம் வங்கு ரோத்தாகிவிட்டோம் எம்மிடம் பணம் இல்லை.'' எனக் கூறி விடமுடியும். இது தமிழ் நாடு அமைக்கும் திட்டத்துடன் தொடர்புள்ளதாக இருக்க முடியும்.

அரசாங்கம் இந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வராவிட்டால் கிராமப் பகுதிகளைச் சேர்ந்த வறிய மக்களே நாட்டுக்காக தமது உயிர்களை தியாகம் செய்வது தொடரும்.

தலதாமாளிகை உட்பட மலைநாடு முழுவதுமே தொண்டமானின் திட்டத்தின் மூலம் தமிழ் ராச்சியத்திற்குள் வந்து விடும். தொண்டமானுக்கு பத்து இலட்சம் பேரின் ஆதரவுள்ளதால் சக்திவாய்ந்தவராகவும் செல்வாக்குள்ளவராகவும் வந்துவிட்டார்.

சிங்கள மக்கள் ஒன்றிணைந்து அந்த யோசனைக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும்.

இந்த நாட்டின் சனத்தொகையில் 75 வீதமாகவுள்ள சிங்களமக்களின் உரிமைகளைப் பற்றி பேச எமக்கு உரிமை உண்டு. இதனை நாம் செய்தால் நாம் 'இனவாதிகள்' என முத்திரை குத்தப்படுகிறோம். தொண்டமானும் மற்றைய சிறுபான்மை இன தலைவர்களும் இது பற்றி பேசினால் அது அவர்களது உரிமை என்கிறார்கள் என்றும் காமினி ஜெயசூரியா தமதுரையில் குறிப்பிட்டுள்ளார்.

# கொழும்பில் மகளிர் பேரணிக்கு பொலிசார் தடைவிதிப்பு

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி இலங்கை வர்த்தக கைத்தொழில் பொது ஊழியர் தொழிற்சங்கம்(சி.எம் யூ.) ஒழுங்கு செய்த மகளிர் ஊர்வலத்திற்கு பொலிசார் அனுமதி வழங்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொருள்களின் விலையுயர்வு மனித உரிமைகள் மறுப்பு, அவசரகால சட்டத்தின் போர்வையில் மக்கள் மீது அரசின் கெடுபிடி போன்றவற்றைக் கண்டிப்பதாகத் தெரிவிக்கும் சுலோக அட்டைகளை ஏந்திய வண்ணம் இவர்கள் கடந்த திங்கட்கிழமை கொள்ளுப்பிட்டி காலி வீதியிலுள்ள இலங்கை வர்த்தக ஊழியர் தொழிற்சங்க அலுவலக வாயிலில் இருந்து புறப்படத் தயாராக இருந்த போதே பொலிசார்தடுத்து நிறுத்திவிட்டனர்.

தொழிற் சங்கத் தலைவர் பாலாதம்பு மூன்று மணி நேரம் பொலிசாருடன் வாதாடியும் பொலிஸ்மா அதிபருக்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் தொலைபேசியில் தொடர்புகொண்டும் எதுவித பலனும் கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப் படுகிறது.

# தோட்டங்கள் தொடர்ந்தும் அரசஉடைமையாகஇருக்கும்

-பிரேமதாசா

பெருந்தோட்டங்கள் யாவும் தொடர்ந்தும் அரசுடைமையாகவே இருக்கும் என்று சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா அறிவித்துள்ளார்.

வந்துரம்மை பகுதியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது, தோட்டங்கள் தொடர்ந்து அரசுடைமையாகவே இருக்கும் என்றும் நிர்வாக மாற்றங்கள் மூலம் அவற்றை மீளமைக்கவே அரசு முயல்கிறது என்றும் தெரிவித்தார். அத்துடன் தோட்டங்கள் மீளமைப்பு செய்யப்படும் போது தொழிலாளர் ஆட்குறைப்பு செய்யப்படமாட்டார்கள் எனவும் குறிப்பிட்டார்.

# பாட ரீதியாகவே பயிலுநர் ஆசிரியர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் ஆசிரியர் வெற்றிடங்களுக்குப் பயிலுநர் ஆசிரியர்கள் பாடவாரியாகவே நியமிக்கப்பட்டார்கள். இவர்களைப் பின்னர் வேறு பாடங்களைக் கற்பிக்க மாற்றக் கூடாது என்று கல்விச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைக்கப் பட்ட சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் குறிப்பிட்ட பாடத்துக்கு வழங்கப்பட்ட நியமனத்தை மாற்றுவது முறையாகாது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

1987 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட ஆரம்ப பயிலுநர் ஆசிரியர்களுக்கும் இம்முறை பின்பற்றப்பட வேண்டும் என்றும் இந்த ஆசிரியர்கள் தாம் சித்தியடைந்த பாடங்களைப் படிப்பிக்கலாம் என்றும் அந்தச் சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(அரியாலை)

பூம்புகார் பவானி கல்விக்கூட இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்றுவியாழக்கிழமை பி. ப. 2 மணிக்கு பாடசாலை அதிபர் க. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. வேலாயுதம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். மாணவர் இயக்கப் பொறுப்பாளர் அரவிந்தன், நல்லூர் கொத்தணி அதிபர் மு. இராமலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார்கள்.

# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றுக

வளர்ப்பு நாய்களுக்கு விசர் நாய் தடுப்பூசிமருந்து ஏற்றும் நடவடிக்கையில் யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி மேற்கொண்டுள்ளார் எதிர்வரும் பதினாறாம் திகதி முதல் முப்பதாம் திகதி வரை இத்தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை அறுபது மத்திய நிலையங்களில் நடைபெறும்

வளர்ப்பு நாய்களுக்கு கட்டாயம் இத்தடுப்பூசி ஏற்றப் படுதல் வேண்டும் எனவும் ஏற்றப்படாத நாய்கள் பிடிக்கப்பட்டு கொல்லப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை நாய்களை வீடுகளில் வளர்ப்பதற்கு அனுமதி பெறல் வேண்டும். இந்த அனுமதியைப் பெறுவதற்கு பெண் நாய்களாயின் ரூபா. 8 50 உம் ஆண் நாய்களாயின் ரூபா.7. 50 உம் செலுத்துதல் வேண்டும் எனவும அவர் மேலும் தெரிவித்தார். (75)

## இம்மாத

கள் இம்மாத இறுதிக்குள் வெளியிடப்படும் எனவும்அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் வடபகுதியில் 1991 ஆம் ஆண்டு நடைபெறாத க. பொ. த. (உ/த) பரீட்சையை எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்படுவதாகவும் பரீட்சை ஆணையாளர் தெரிவித்தார்.

# நூலகம் திறப்பு

(குருநகர்)

நாவாந்துறை சென் மேரிஸ் சனசமூக நிலையத்தில் வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை காலை 10மணிக்கு நூலகம் ஒன்று திறந்து வைக்கப்பட இருக்கிறது.

நிலையத் தலைவர் திரு ச. மரியநாயகம் தலைமையில் நடைபெறும் வைபவத்தில் வண பிதா, பற்றிக் ஞானப்பிரகாசம்' உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு சுந்தரம் டிவகலாலா' யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. வி. பொ பாலசிங்கம் ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்துவர். திரு. டானியல் அன்ரனி நன்றி தெரிவிப்பார். (21)

# 1989 ஆம் ஆண்டுத் தேர்தலில் அதிகாரத் துஷ்பிரயோகம்

## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

1989 ஆம் ஆண்டு தேர்தலின் போது அதிகார துஷ்பிரயோகங்கள் இடம் பெற்றதாகவும், துப்பாக்கி முனையிலும் வாக்களிப்பு நடத்தப்பட்டதாகவும்தேர்தல் ஆணையாளர்சந்திரானந்த டி.சில்வா கூறியுள்ளார்.

கடந்த வாரம் அவர் அரசுக்கு கையளித்த அறிக்கை ஒன்றில் மேலும் கூறுகையில் 1989 ஆம் ஆண்டுத்தேர்தலின் போது கட்சிகளினதும் முன்னுரிமை வாக்குகளினதும் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்வதற்காக தேர்தல் வேலைகளில் தலையீடுகளும், குறுக்கீடுகளும் செய்த குழப்பகரமான நிலைமையே இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் முன்னுரிமை வாக்குகள் அளிக்கும்முறையை நீக்குவது பற்றி அரசு ஆலோசிக்க வேண்டுமெனவும் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவ அதிகாரிகளின் தங்கக் கடத்தல்

## விசாரணை முடிவுகள் தளபதியிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

கடந்த ஜூலை 31ஆம்திகதி எட்டு மில்லியன் ரூபா பெறுமதியுடைய தங்கத்தை நாட்டுக்குள் கடத்திவர முயன்ற குற்றச்சாட்டின் பேரில் விசாரணைக்குட்படுத்தப்பட்டுவரும் இராணுவ அதிகாரிகளின் வாக்குமூலங்கள் சிறிலங்கா இராணுவத் தளபதி ஜெனரல் சிசில் வைத்தியரட்ணாவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இராணுவ பிரிகேடியர் ஒருவர் தலைமையிலான இராணுவ நீதிமன்றத்தின் கீழ் ஒரு மேஜர், ஒரு லெப்டினன்ட்ஆகியோர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

எண்பது தங்க பிஸ்கட்டுகளையும், மூவாயிரத்திற்கும் அதிகமான தங்க முலாம் பூசிய கைக்கடிகாரங்களையும் இந்த இராணுவ அதிகாரிகள்கடத்திவரமுயன்ற சமயம் சுங்கத்துறையினரால் கண்டு பிடிக்கப்பட்டு பின்பு புலனாய்வுத் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்பது தெரிந்ததே.

2ஆம் உலகப் போரில் பங்குபற்றிய

## 150 பிரிட். இராணுவத்தினர் கொழும்பு வரவுள்ளனர்

(கொழும்பு)

இரண்டாம் உலகப் போரின் போது இலங்கையில் கடமையாற்றிய நூற்றியைம்பது பிரிட்டிஷ் இராணுவத்தினர் இலங்கை வரவுள்ளனர். இப்போரின் ஐம்பதாவது ஆண்டைக் குறிக்கும் முகமாக இந்நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

பிரிட்டன், கனடா, அவுஸ்திரேலியா நாடுகளைச்சேர்ந்த இவர்கள் ஏயர் லங்கா விமானமூலம் இங்கு அழைத்துவரப்படவுள்ளனர். மார்ச் 22முதல் ஏப்ரல் 9ஆம்திகதிவரை இங்கு தங்கியிருந்து விமானத் தளங்கள், இராணுவ முகாம்கள், கடற்படைத்தளங்கள் ஆகியவற்றுக்கும் விஜயம்செய்யவுள்ளனர். இவர்கள் போரின் போது இறந்த வீரர்களின் கல்லறைகளுக்கும் செல்லவுள்ளனர்.

## காட்டுமரம் தறித்த 400 முஸ்லிம்கள் கைது

சட்ட விரோதமாக காட்டு மரங்களைத் தறித்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் பொலிசாரால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சுமார் நானூறு முஸ்லிம்களையும் விடுவிக்கக்கோரி ஒரு குழு கொழும்பு சென்றுள்ளது.

மன்னம்பிட்டிபகுதியில்சட்டவிரோதமாகக் காட்டு மரங்களைத் தறித்தனர் எனக்கூறி பொலநறுவைப் பொலிசார் கடந்த ஆறாம் திகதி காலையில் இந்த நானூறு பேரையும் கைது செய்தனர். இவர்களை விடுவிக்கக் கோரி நாகு வெப்பை என்பவர் தலைமையில் சென்றுள்ள இக்குழுவினர் நீதி உயர் கல்வி அமைச்சர்ஏ. சீ.எஸ். ஹமீதை சந்தித்துப் பேசியுள்ளனர். அத்துடன் ஜனாதிபதி செயலகத்துடனும் தொடர்பு கொண்டுள்ளனர்.

எனினும், வாழைச்சேனை, ஏறாவூர் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து இப் பகுதியில் குடியேறிய இவர்கள் இரகசியமான முறையில் சட்டவிரோதமாக மரங்களைத் தறித்து விற்பதில் ஈடுபட்டிருந்தனர் என்றும், மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்யப்படுவார்கள் என்றும் பொலநறுவைப் பகுதி பொலிசார் கூறியுள்ளனர்.

## மரண அறிவித்தல்

### திரு. வல்லிபுரம் சுப்பிரமணியம்

இருபாலையைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராஜா வல்லிபுரம் சுப்பிரமணியம் அவர்கள் 11-03-92 புதன்கிழமை காலை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி வல்லிபுரம் ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சோமசுந்தரம் (இருபாலை), இராசம்மா (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நகுலேஸ்வரியின் (சீத்தா) அன்புக் கணவரும், புவனேஸ்வரி, சிவனேஸ்வரி, புவிராஜசிங்கம் (ஈழநாதம்), ரங்கநாதன், மங்களேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், செல்வன் யோ. பிரதாப் அவர்களின் அன்புப் பேரனும் திரு அ. யோகநாதன்(சுவிஸ்), திரு. கு. லிங்கநாதன், (கல்யாணி கிறீம் ஹவுஸ்), திருமதி பு. ஜெகதீஸ்வரி (கந்தர்மடம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற (லோட்) கந்தசாமி-மீனாம்பாள், தி. நாகேந்திரம் - பவளம் (நீர்வேலி), திருமதி செல்லப்பா (கொழும்பு) ஆகியோரின் அன்பு மருமகனும், திருமதி செ. லீலா (மாறம்பை), திரு. க. காசிநாதன், திரு தனபாலரட்ணம், திருமதி தே. தஞ்சமலர், செல்வி மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், திரு. பாலசிங்கம் அவர்களின் சகலனும் ஆவார்..

அன்னாரின் இறுதிக் கிரியைகள் லெப். மதி வீதி (மெம்மோறியல்) வீதி, ''திருப்பதி'' இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக இன்று வியாழக்கிழமை (12-03-92) காலை 9·00 மணிக்கு மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

லெப். மதி வீதி,
மானிப்பாய்.
(சி / 4041)

தகவல் :
சு. புவிராஜசிங்கம்
சு. ரங்கநாதன்
(மகன்மார்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திராவீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## கல்வித் துறையில் பெரும் பாதிப்பு ஏற்படுகிறது

இலங்கையின் கல்வித்துறையில் பெரும் இழப்பு ஏற்படுவது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது தேசியகல்விநிலையத்தின் ஆராய்ச்சிப் பிரிவு 1990 ஆம் ஆண்டு நடத்திய மதிப்பீடு ஒன்றின் மூலம் இதனை அறிய முடிந்துள்ளது. பொருளாதாரக் கஷ்டங்கள் கற்றலில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் உடல் மற்றும் மனோ ரீதியான ஆரோக்கியக் கேடு என்பவையே இதற்குப் பிரதான காரணமாகும்.

பாடசாலைகளில் புறம்பான வகுப்பறைகளும், தளபாடங்களும் போதியளவு இல்லாமையும் மற்றொரு குறைபாடாகும் பாடசாலைகளைச் சீருடைகளைப் பெறுவதும், பெற்றோருக்கு உதவ வேண்டியிருப்பதும், கிராமப்புற மாணவர்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகளாகும் என்றும், அவ் ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### வேலை நீக்கம்

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தில் கடமையாற்றிய இரு ஊழியர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த அலுவலகத்தில் இருந்து டீசல் திருடியதன் காரணமாகவே இந்த இரு ஊழியர்களும் வேலை நீக்கம் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. (75)

## பரீட்சையை நடத்தக் கோரி மாணவர் நேற்று ஆர்ப்பாட்டம்

[யாழ்ப்பாணம்]

கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரத்திற்கான விசேட பரீட்சையை காலதாமதமின்றி உடனடியாக நடத்தக் கோரி நேற்று யாழ். நகரில் ஆர்ப்பாட்டப்பேரணி நடத்தப்பட்டது.

பல்கலைக்கழக பாடசாலை மாணவர்கள் இணைந்து இப் பேரணியை நடாத்தினர். யாழ். பல்கலைக்கழக மாணவர் அவையினர் ஏற்பாடு செய்திருந்த இப் பேரணியில் அனைத்துப் பாடசாலைகளின் உயர்தர மாணவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

காலை 9.30 மணியளவில் யாழ். பல்கலைக் கழகத்தில் இருந்து ஆரம்பமான இப் பேரணி யாழ். அரச செயலகத்தை அடைந்தது. செயலகத்தில் யாழ். அரசாங்க அதிபரிடம் ஜனாதிபதிக்கான மகஜர் கையளிக்கப்பட்டது. மகஜரைப் பெற்றுக்கொண்ட அரச அதிபர் இம் மகஜர் உடனடியாக உரிய இடத்துக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் இவ் விடயம் தொடர்பாக மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதியளித்தார்.

மகஜரின் ஒரு பிரதி சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அலுவலத்திலும் கையளிக்கப்பட்டது [ச

## 180 சிங்களக் குடும்பங்கள் கொக்கிளாயில் குடியேற்றம்

கிடுகுக் கொட்டகைகள் அமைக்கப்பட்டு சுமார் நூற்றி எண்பது சிங்கள குடும்பங்கள் கொக்கிளாய் பகுதியில் குடியேற்றப்பட்டுள்ளன.

அண்மையில் இப் பகுதிக்கு விஜயம் செய்த கடற்தொழில் ராஜாங்க அமைச்சர்தலைமையிலான குழுவொன்று இக் குடியேற்ற வாசிகளுக்கு குடி நீர் வசதிகள், சுகாதாரம் மற்றும் பல துறைகளில் அரசு உதவி வழங்கும் என்று உறுதி கூறியுள்ளது.

## வங்காள விரிகுடாவில் இந்தியகண்காணிப்புதீவிரம்

இந்தியக் கடற்படையினர் கடலோரக் கண்காணிப்புபணியினை தீவிரமாக்கியுள்ளனர். ரகசிய வானொலி ஒன்று ஒட்டுக் கேட்கப்பட்டதாகவும், அதனையடுத்து தமிழகத்திற்கும், யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான வங்காள விரிகுடா கடற்பரப்பில் கண்காணிப்பு தீவிரமாக்கப்பட்டிருப்பதாகவும் சென்னையில் அறிவிக்கப்படுகிறது.

இலங்கை தமிழ் மாணவருக்கு

## தமிழகக் கல்லூரிகளில் பரீட்சை அனுமதி மறுப்பு

தமிழ்நாட்டில் உள்ள கல்லூரிகளில் கல்வி கற்ற இலங்கை மாணவர்களுக்கு இறுதி ஆண்டுப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அரசு அனுமதி மறுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பல வருடங்களாக தமிழ் நாட்டிலுள்ள கல்லூரிகளில் கல்வி கற்று வந்த பல தமிழ் இளைஞர்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு அண்ணா சதுக்கத்தில் அமைந்துள்ள மாநிலக் கல்லூரியில் எம். ஏ. இறுதியாண்டுப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதி மறுக்கப்பட்டதால் கல்வியை பூர்த்தி செய்ய முடியாத நிலையில் பல மாணவர்கள் ஏமாற்றத்துடன் இலங்கை திரும்பியுள்ளனர். (ச)

## கோஷ்டிகள் மோதல்; ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் இரண்டு விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடைபெற்ற கோஷ்டி மோதலில் ஒருவர் கத்திவெட்டிற்கு இலக்காகி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழகத்திற்கும் நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியிலேயே இம் மோதல் இடம் பெற்றது இதில் கொலின்ரஸ் (18) என்பவரே தலையில் கத்தியால் வெட்டப்பட்டவராவர்

### ஏழு காவலரண்கள்

இருவர் வீரச்சாவடைந்தனர்.

இந்த அதிரடித்தாக்குதல் சுமார் பத்து நிமிடங்கள் மட்டுமே இடம்பெற்றது. புலிகளின் தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாத இராணுவத்தினர் காயமடைந்த தமது சகாக்களையும் தூக்கிக் கொண்டு முகாமினுள் ஓடிவிட்டனர்.

### கொழும்பில்

டையவில்லை என தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை நேற்று குண்டு வெடிப்பு இடம்பெற்ற பகுதியை கண்டு பிடிப்பதற்காக உலங்கு வானூர்திகள் தாழப் பறந்து தேடுதல் நடத்துவதாகவும் அரசு தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

### தட்டுவான்

விமானப் படையைச் சேர்ந்த மூன்று குண்டுவீச்சு விமானங்களும், இரண்டு வானூர்திகளும் ஈடுபட்டிருந்தன.

விமானக் குண்டு வீச்சுக்கள் தொடர்ந்தும் இடம் பெற்று வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

### பிரபாகரனே

நாடு அரசு என்ன நிலைப்பாட்டைக் கொண்டிருந்தாலும் 'குயில்கள்' தொடர்ந்தும் தமது ஆதரவை விடுதலைப் புலிகளுக்கு வழங்குவார்கள் என்றார்.